[7th December 1961

District Medical Officers (bifurcation of jurisdiction)

*2155 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பெரிய ஜில்லாக்களை எப்படி இரண்டாகப் பிரித்து இரண்டு அதிகாரிகளை போடப்பட்டுள்ளதோ அதேபோல் டிஸ்டிரிக் மெடிகல் ஆபீஸர்களின் அதிகார எல்லையைப் பிரிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இப்போது சமீப காலத்திலே ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆஸ்பத்திரிகள், பிரைமரி ஹெல்த் சென்டர்கள் போன்ற பல ஆஸ்பத்திரிகள் அதிகப்படுகின்ற காரணத்தினால், டி.எம்.ஓ-வாக இருக்கக்கூடியவர்களுக்கு வேலை அதிகமுள்ளது. ஆகவே, நிர்வாகத்திலும், இன்னும் சில விஷயங்களிலும் குறை ஏற்படுகிறது. இந்த நிலைமை இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, இதை இனி மேலாவது இரண்டாகப் பிரித்து, இரண்டு டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசர்கள் பெரிய ஜில்லாக்களுக்குப் போட ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு ஒரு யோசனை முன்பு இருந்தது. இன்னொரு சிவில் சர்ஜன் ஏற்படுத்தி, டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீஸர் வேலையை இரண்டாகப் பிரிக்கலாம் என்று இருந்தது. அது இப்போது இன்னும் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆகவே, இனிமேல்தான் இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

Loans for Harijans (Industries)

*2156 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு கைத்தொழில் அபிவிருத்திக்காக எவ்வளவு பணம் கடனாகக் கொடுக்கப்பட்டது ?

(இ) என்னென்ன தொழில்களுக்குத் தாலுக்கா வாரியாக ?

(உ) 1957 முதல் 1960 வரை எவ்வளவு வசூலிக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) (இ) (உ) Loans under the Madras State Aid to Industries Act, 1922, are granted without reference to the caste of the applicant-industrialists. Particulars of loans granted to Harijans alone are not, therefore available.